L / 201

# கழிவுணவு ஊட்டல்



பிரசுரிப்போர்

மனித வள அபிவிருத்திப் பிரிவு
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
கற்றம்பே - பேராதனை

## கழிவுணவு என்றால் என்ன?

கழிவுணவு என்றால் உணவு தயாரிக்கும் போது, சமைக்கும் போது அல்லது உண்ணும் போது எஞ்சுகின்ற தாவரப் பதார்த்தங்கள், இறைச்சி வகைகள், விலங்குப் பதார்த்தங்கள் போன்றவை ஆகும்.

உதாரணம் - எஞ்சிய கழிவுகள்,
மரக்கறிக் கழிவுகள்
போன்றன.

## கழிவுணவை ஏன் ஊட்ட வேண்டும்?

**பன்றிகளின் பராமரிப்பில் .......................**

- உணவு ஊட்டலிற்கான செலவினத்தைக் குறைப்பதற்கு, (உற்பத்திச் செலவின் ஏறக்குறைய 65-70% உணவூட்டலிற் காக செலவிடப்படுகிறது).
- வளங்களைச் சேமிப்பதற்கு.
- உணவுக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு செலவு குறைந்த ஒரு முறை.
- சூழல் மாசுபடுதலைக் குறைப்பதற்கு.
- கழிவுணவிலிருந்து பணத்தைப் பெறுவதற்கு.

## கழிவுணவு ஊட்டலின் போது ஏற்படும் பிரச்சினைகள்

- கழிவுணவு கெடுதி விளைவிக்கக்கூடிய நோய்க் கிருமிகளைக் (உ-ம் சல்மொனல்லா, குளொஸ்திரியம் போன்றவை) கொண்டிருப்பதோடு தீங்கு விளைவிக்கும் நோய்களையும் (உ-ம் கால்வாய் நோய், பன்றிக் கொலரா, ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் போன்றவை கடத்த வல்லது).
- பழுதடைந்த கழிவுணவு சமிபாட்டுக்குழப்பங்களைத் தோற்றுவிக்கும்.



CM 002656 - 1,000 (2003 / 03)

- கழிவுணவில் பாதகம் விளைவிக்கக்கூடிய கூரான உலோக கண்ணாடி மரத்துண்டுகள், பொலித்தீன், பிளாஸ்ரிக் துண்டுகள் என்பன காணப்படலாம்.
- கிருமிநாசினி போன்ற கெடுதி விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருட்களை கழிவு உணவானது கொண்டிருக்கலாம்.
- பன்றிக் கூட்டினையும், சூழலையும் அசுத்தப் படுத்தும்.
- காகங்கள், நாய்கள் போன்ற விலங்குகளைக் கவர்ந்திழுக்கும்.
- கழிவுணவில் சமநிலையற்ற உணவுச் சத்துக்கள் அளவில் குறைவாகக் காணப்படுவதனால் குறைந்த வளர்ச்சி வீதம்.
- கொழுப்பின் அளவு கூட என்பதனால் தரம் குறைந்த பன்றி இறைச்சி.
- கழிவுணவு பெருந்தொகையானது என்பதனால் கையாளுதலில் பிரச்சினைகள்.
- விரைவில் அழிவடைவதனால் பழுதடையாமல் பாதுகாத்து வைக்கும் தன்மை குறைவு.
- சேகரித்தல், வாகனத்தில் ஏற்றிச் செல்லல் போன்றவற்றில் ஏற்படும் கஷ்டங்கள்.

## கழிவுணவூட்டல்

- கழிவுணவைக் கொண்டிருக்கும் பகுதியிலிருந்து பன்றிகளைத் தனியாக்கவும். இவ் விடங்களிற்கு பன்றிகள் செல்வதைத் தடுப்பதற்கு தேவையான சுவர் போன்ற கட்டிடங்களை அமைக்க வேண்டும்.
- வடிகால் அமைப்பு பன்றிகள் வளர்க்கப்படும் இடங்களில் இருந்து விலக்கி திசை திருப்பப்பட வேண்டும்.



- முறையான வீடமைப்பினாலும், வடிகால் அமைப்பு முறையினாலும் முறையான காற்றோட்டம், வெளிச்சம் போன்றவற்றினாலும் துர்நாற்றத்தைக் குறைக்கலாம்.
- பரிகரிக்கப்படாத கழிவுணவானது பரிகரிக்கப்படும் வரை மூடப்பட்ட ஒழுங்கற்ற கொள்கலன்களில் வைக்கப்படுதல் வேண்டும்.
- சேகரித்தல், ஏற்றிச் செல்லல் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் கொள்கலன்கள் யாவற்றையும் தினந்தோறும் கழுவிச் சுத்தமாக்கி தொற்றுநீக்கவும்.
- கழிவுணவில் கலந்து காணப்படும் உலோக, பொலித்தீன், பிளாஸ்ரிக் துண்டுகள், கண்ணாடி, மரப்பொருட்கள் போன்ற பிற பொருட்களை தேர்ந்து அகற்றல் வேண்டும்.
- சேகரிக்கப்பட்ட முழுக்கழிவுணவையும் அதே நாளிலேயே பாவித்து முடிக்கவும். கூடிய நேரத்திற்கு வைத்திருக்க வேண்டாம்.
- பரிகரிக்கப்பட்ட கழிவுணவை ஏற்றிச்செல்ல சுத்தமான கிருமி நீக்கப்பட்ட கொள்கலன்களையே பாவிக்கவும்.
- கழிவுணவை ஏற்றிச்செல்ல பயன்படுத்திய எந்தவொரு வாகனத்தையும், ஏனைய விலங்குகளை ஏற்றிச்செல்ல பயன்படுத்த வேண்டாம்.
- கழிவுணவானது எப்போதும் பன்றிகளுக்கு ஊட்டப்பட முன் அவிக்கப்படுதல் வேண்டும்.
- குறைந்த சத்துள்ள உணவுப் பகுதியை நீக்கிவிட வேண்டும்.
- ஒவ்வொருநாளும் காலை மாலை வேளைகளில் பன்றிக் கூட்டைச் சுத்தம் செய்தல் வேண்டும்.
- பன்றிக்கூட்டில் கழிவுணவுகள் உணவுப் பாத்திரத்திற்குள் இடப்படுதல் வேண்டும்.



உணவானது பன்றியின் கழிவுகளுடன் கலத்தல் கூடாது. பன்றி அமரும்போது உணவு அதன் உடம்பில் ஒட்டிக் கொள்ளக் கூடாது. மேலும் இதனால் உணவு விரயமாகலாம். ஆகவே உணவு இட, கழிவகற்ற, உடற் பயிற்சிக்கு போதுமான இடவசதி வழங்கப் படுதல் வேண்டும்.

- பன்றிக் கூட்டைச் சுத்தம் செய்வதற்கு குறைந்தது இரு கிழமைக்கு ஒரு தடவையாவது தொற்றுநீக்கியை உபயோகிக்க வேண்டும்.
- பன்றிகளில் ஏதாவது நோய் ஏற்படுகிறதா என்பதை அவதானித்து, அவ்வாறு ஏதாவது காணப்பட்டால் மிருக வைத்தியரின் உதவியை உடன் நாடுதல் வேண்டும்.
- கோழி உற்பத்தியின் உபபொருட்கள், அரிசித்தவிடு (Rice bran, Rice polish), உலர்ந்த மீன், உலர்ந்த மீன் தூள் என்பவற்றை கழிவுடன் கலந்து தேவையான அளவில் கொடுக்கவும். இதனால் கழிவுணவு சமநிலை உணவாக மேம்படுத்தப்படும்.

### கழிவுணவைப் பரிகரித்தல்

- கழிவுணவை 212 பாகை பரனைட் அல்லது 100 பாக செல்சியசில் 30 நிமிடங்களுக்கு அவிக்கவும்.
- பின்னர் அதனைக் குளிர வைத்து இயலுமான விரைவில் பன்றிகளுக்கு உணவாகக் கொடுக்கவும்.
- பரிகரிக்கப்பட்ட கழிவுணவு முழுவதையும் பரிகரித்து 04-06 மணித்தியாலங்களிற்குள் பன்றிகளின் உணவிற்காக பயன்படுத்தி முடிக்கவும்.

## கழிவுணவு பற்றி மேலதிகமாக ...

- கழிவுணவானது பலவிதமான உணவுப்பதார்த்தங்களைக் கொண்டுள்ளது. அதன் இரசாயன கூற்றமைப்பும், அதிலுள்ள போசணைச்சத்துக்களும் பலவித வேறுபாடுகளிற்கு உட்படுகின்றன.



- பொருத்தமான வேறு பொருட்களைச் சேர்ப்பதனால் கழிவுணவிலுள்ள சத்துக்களின் தரம் உயர்த்தப் படுவதன் மூலம் கழிவுணவின் தரமும் உயர்த்தப் படுகின்றது. ஆகவே இறைச்சிக் கோழி உற்பத்தியில் வரும் மீதிகள், தவிடு அரைக்கப்பட்ட மீன், உலர் மீன் என்பன உணவின் சமநிலைக்கு ஏற்ப சேர்க்கப்படுதல் வேண்டும்.
- பன்றியின் வயதிற்கேற்ப நிறை காணப்பட்டால் அவை நல்ல உற்பத்தியைக் கொடுக்கும்.
- கழிவுணவின் இரசாயன கூற்றமைப்பிற்கு ஏற்ப சேர்க்கப்பட வேண்டிய வேறு பொருட்கள் மாறுபடும். எனவே கழிவுண வின் இரசாயனக் கூற்றமைப்பு மாறுபாடுகளைக் கண்டறிந்து கொள்வதற்காக அதனை முதலில் பகுத்தாராய வேண்டும்.
- அப்பகுத்தாய்வு பெறுபேற்றிலிருந்து வேறு பொருட்களைக் கலப்பதற்குரிய கலவை நியம அளவீடுகளை கணித்துக் கொள்ளலாம். (உ + ம் இறைச்சித் துண்டுகளை அதிகமாகக் கொண்ட கழிவுணவிற்கு தானியங்களும் அவற்றின் உபஉற்பத்திப் பொருட்களும் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.)
- இவ்வாறான பகுத்தாய்வு கலவை நியம அளவீடுகள் போன்றவற்றைச் செய்து கொள்ள பேராதனை கண்ணொறுவையில் அமைந்துள்ள மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் விலங்கு போசணைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.
- கழிவுணவை கொழுக்க வைக்கும் பன்றிகளுக்குரிய அடிப்படை உணவாகக் கொடுக்கலாம். ஆனால் அதனைக் கொடுக்கும் போது கொழுக்கவைக்கும் பன்றிகள் 40 கிலோ கிராம் உடல் நிறையை அடைந்திருக்க வேண்டும்.
- இனவிருத்திக்கான விலங்குகளிற்கு முக்கியமாகப் பெண் பன்றிகளுக்கு கழிவுணவு ஊட்டக் கூடாது. ஏனெனில் இவ்வின விருத்திக்கான பெண் பன்றிகள் பிறபுரிமையியல் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆகையால் கழிவுணவானது எவ்வளவு சுகாதாரமாகப் பரிகரிக்கப்பட்ட போதிலும், அதனை



பெண் பன்றிகளுக்கு கொடுத்து நோய் ஏற்படும் சந்தர்ப்பங்களை நாமே ஏற்படுத்தக்கூடாது.

- பொலித்தீன், பிளாஸ்ரிக் துண்டுகள் என்பன விலங்குகளுக்கு ஆபத்தானது மட்டுமல்லாது அது விலங்குகளைக் கொல்லவும் கூடியன. அதிகமான பண்ணையாளர்கள் உணவகங்களிலிருந்து கழிவுணவு களைக் கொண்டுவந்து உணவாக வழங்குகிறார்கள். இக்கழிவுணவு அதிக பொலித்தீனைக் கொண்டுள்ளது.
- பன்றியினது தொட்டி ஒவ்வொரு நாளும், காலையிலும் மாலையிலும் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும். அதே வேளை உணவுப் பாத்திரம், நீர்ப்பாத்திரம் என்பவையும் தினந் தோறும் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.
- மேலும் தொட்டியைச் சுற்றியுள்ள இடங்களை ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சுத்தம் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்து வந்தால் துர்நாற்றம் இருக்காது.
- மக்கள் பன்றிகளுக்கு வீடமைக்கும் போது உணவுத் தொட்டியை அமைப்பதில்லையாதலால் உணவு நிலத்தில் போடப்படுகிறது. இவ்வாறு பராமரிக்கும் போது மலம், சிறுநீர் என்பவற்றுடன் உணவு கலக்கப்படுகிறது. இது பன்றியின் உணவு விருப்பைக் குறைப்பதுடன் உணவும் விரயமாகும்.
- சரியான வீடமைப்பு, நல்ல காற்றோட்டம், தொடர்ச்சியான நீர் விநியோகம், நல்ல சூரிய ஒளி, சிறந்த உணவுப் பாத்திரம் என்பன பன்றிக்கூட்டில் அடங்கியிருத்தல் வேண்டும். இதனால் அதிக பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.
- விலங்கின் நிறையை கிழமைக்கு ஒரு தடவை எடுப்பதன் மூலம் விலங்கின் வளர்ச்சி சரியான முறையில் உள்ளதா என அறிய முடியும்.
- நலிவான விலங்குகளுக்கு உணவூட்டும்போது உணவின் அளவும் தரமும் சிறந்ததாக இருப்பதுடன் அவை வேறாக உணவூட்டப்படுதல் வேண்டும்.



L /201 திருத்திய பதிப்பு மார்ச் 2003

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.